இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலாளர் / ஆணையரின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / ஆணையர்

**செ.மு.ந.க.எண்.45603/2019/பி3/நாள்.26.07.2019**

பொருள்: பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – இளநிலை உதவியாளர்கள்– மாறுதலும் நியமனமும் செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை : இளநிலை உதவியாளர்கள் அளித்துள்ள மாறுதல் கோரும் விண்ணப்பங்கள்.

*****

பொதுநலன் மற்றும் நிர்வாக நலன் கருதிக் கீழ்க்கண்டவாறு இளநிலை உதவியாளர்களை மாறுதல் செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | இளநிலை உதவியாளர்கள் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் அலுவலகம் திரு/திருமதி/செல்வி | மாறுதல் செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|
| 1. | க.பல்லவி, இணை ஆணையர் அலுவலகம், மயிலாடுதுறை. | உதவி ஆணையர் அலுவலகம், கடலூர். |
| 2. | கோ.புகழேந்தி, இணை ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் | உதவி ஆணையர் அலுவலகம், விழுப்புரம் |
| 3. | சி.மணிவண்ணன், இணை ஆணையர் அலுவலகம், சிவகங்கை | உதவி ஆணையர் அலுவலகம், பரமக்குடி |
| 4. | கு.சௌந்தர்ராஜன், உதவி ஆணையர் அலுவலகம், விழுப்புரம் | உதவி தணிக்கை அலுவலர் அலுவலகம், மயிலாடுதுறை. |

2. மாறுதல் செய்யப்பட்டுள்ள இளநிலை உதவியாளர்களைத் தக்க மாற்று ஏற்பாடுகள் செய்து உடனடியாகப் பணியிலிருந்து விடுவிக்குமாறு தொடர்புடைய சார்நிலை அலுவலர்களைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Scanned by CamScanner

3. சார்நிலை அலுவலர்களின் ஆணையின்படித் தம்மிடம் உள்ள அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைத்துவிட்டு மாறுதல் செய்யப்பட்டுள்ள பணியிடத்தில் உடன் பணியில் சேர இளநிலை உதவியாளர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

4. பொறுப்பிலிருந்து விடுபட்டமைக்கும் புதிய பணியிடத்தில் பணியில் சேர்ந்தமைக்கும் அறிக்கையனுப்பவும் சார்நிலை அலுவலர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. வரிசை எண் 1–4 வரை உள்ள இளநிலை உதவியாளருக்கு அவர்களின் விருப்பத்தின் பேரில் மாறுதல் செய்யப்படுவதால் மாறுதல் பயணப்படி மற்றும் ஒட்டுமொத்தத் தொகை பெற அனுமதியில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–க.பணீந்திரரெட்டி,
முதன்மைச் செயலாளர்/ஆணையர்

/உண்மை நகல் உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

பெறுநர்
திரு / செல்வி / திருமதி

1–4) கலம் 1–ல் காணும் இளநிலை உதவியாளர்கள்

5–8) இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சிவகங்கை /மயிலாடுதுறை /தஞ்சாவூர் / விழுப்புரம்

9–11) உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை
விழுப்புரம் / கடலூர் / பரமக்குடி

12) உதவி தணிக்கை அலுவலர், மயிலாடுதுறை
13) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
14) டபிள்யூ பிரிவு, தலைமையிடம்.
15) சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
16) அனைத்து தலைமையிட அலுவலர்கள்.
17) அனைத்து சார்நிலை அலுவலர்கள் (மின்னஞ்சல் மூலமாக)
18) மிகை.

Scanned by CamScanner

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு.சி.மணிவண்ணன், இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், பரமக்குடி – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1)த் துறை

**அரசாணை (3ப) எண்.10**

**நாள்:22.12.2020**
**சார்வரி, மார்கழி – 7**
**திருவள்ளுவராண்டு–2051**

**படிக்கப்பட்டவை**

1. அரசாணை(நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு 1) துறை, நாள்.23.01.2020.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.55705 / 2016 / பி3, நாள்.05.02.2020 மற்றும் 28.10.2020.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறுவதிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பான ஒருங்கிணைந்த வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கடிதங்களில், அரியலூர், உதவி ஆணையர் பிரிவிற்குட்பட்ட, அரியலூர் சரக ஆய்வராகப் பணியாற்றியபோது திரு.மு.சின்னசாமி 24.09.2015 அன்று காலமானார் எனவும், அன்னாரது மகன் திரு.சி.மணிவண்ணன் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி விண்ணப்பித்ததன் அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 29.05.2017 முற்பகல் முதல் பரமக்குடி, உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார் எனவும், திரு.சி.மணிவண்ணன், மார்ச் 2011–ல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவர் பிறந்த தேதி 10.01.1996 எனவும், அன்னாருக்கு பணிநியமனம் வழங்கப்பட்டபோது, வயது மற்றும் கல்வித் தகுதி உள்ளிட்ட அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளார் எனவும், அவர் பணியேற்ற நாளான

Scanned by CamScanner

29.05.2017 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, பரமக்குடி, உதவி ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சி.மணிவண்ணன் என்பவரின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இந்து சமய அறநிலையத்துறையில், அவர் பணியில் சேர்ந்த நாளான 29.05.2017 முற்பகல் முதல் அப்பதவிக்குரிய உடல் தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாறு முன்னிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

6. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.20146/Q1/2020, நாள்.10.12.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.33494/G2/2020-1, நாள் 15.12.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

விக்ரம் கபூர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
திரு.சி.மணிவண்ணன், இளநிலை உதவியாளர்.
உதவி ஆணையர் அலுவலகம், பரமக்குடி.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
நகல்:-
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், இராமநாதபுரம்.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை, சென்னை–9
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
தேர்வாணையச் சாலை, சென்னை–3.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

22.12.2020

Scanned by CamScanner

ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை–34.

ந.க.எண்.55705/2016/பி.3/ நாள்.05.03.2021

பொருள்: பணிப்பிரிவு – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.சி.மணிவண்ணன்,– இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், பரமக்குடி – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டது –தொடர்பாக.

பார்வை: அரசாணை எண்(3ப). 10 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை நாள். 22.12.2020.

*******

பார்வைக்குறிப்பின் மூலம் பரமக்குடி, உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சி.மணிவண்ணன் என்பவருக்கு, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யும்பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

2) மேலும், தனியரின் 10–ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் தனியருக்கு சார்பு செய்யும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. மேற்படி சான்றிதழ் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு : 1. மேற்படி அரசாணை நகல்
2. 10–ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்

08032021

ஆணையருக்காக

பெறுநர்

1. உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
பரமக்குடி. (ஒப்புகை பதிவஞ்சல் மூலம்)

2. மிகை.

Scanned by CamScanner

இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரின் செயல்முறைகள்

முன்னிலை:- முனைவர்.மா.வீர சண்முக மணி,
ஆணையர்.

ந.க.எண்.67123-6/2016/பி3, நாள்.22.05.2017

பொருள் : பணிப்பிரிவு – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.சி.மணிவண்ணன், த/பெ.அமரர்.திரு.மு.சின்னசாமி, ஆய்வர், அரியலூர் – கருணை அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிலைமை) சட்டம் 2016–ன், சட்டப் பிரிவு 18(1)–ன் விலக்கின்படி – இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்தல் – உத்தரவிடப்படுகிறது.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.61, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 19.7.06.
2. அரசாணை (நிலை) எண்.135, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 4.10.06.
3. அரசாணை (டி) எண்.470, தமிழ் வளர்ச்சி அறநிலையம் மற்றும் செய்தித்துறை (அநி2–1) துறை நாள் 23.7.2009
4. அரசு செயலாளர் த.வ.அ.நி. மற்றும் செய்தித்துறை நே.மு.க.எண்.11453/அநிமு2/2007, நாள் 18.4.07
5. அரசு செயலாளர் த.வ.அ.நி. மற்றும் செய்தித்துறை க.எண்.17634/அநி2–1/2006–1, நாள் 19.4.07
6. திரு.சி.மணிவண்ணன், விண்ணப்பம் நாள்.29.10.2015
7. இணை ஆணையர், திருச்சி, ந.க.எண்.11551/2016/அ2 நாள்.19.09.2016.

••••••••

திரு.சின்னசாமி, என்பவர் இந்து சமய அறநிலையத்துறை, அரியலூர் உதவி ஆணையர் பிரிவிற்குட்பட்ட அரியலூர் சரக ஆய்வராக பணியாற்றியபோது கடந்த 24.09.2015 அன்று காலமானார்.

அன்னாரது மகன் திரு.சி.மணிவண்ணன், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு கேட்டு பார்வை குறிப்பு 6–ல் விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் சார்நிலை அலுவலரிடமிருந்து பரிந்துரை செய்து பார்வை குறிப்பு 7–ல் வரப்பெற்றுள்ளது.

மேற்படியாரது விண்ணப்பம் மற்றும் இதர சான்றுகளை பரிசீலித்தும் பார்வையில் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் அரசால் கருணை அடிப்படையில் நியமனம் தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளுக்குட்பட்டு அரியலூர் உதவி ஆணையர் பிரிவிற்குட்பட்ட அரியலூர் சரக ஆய்வராக பணியாற்றியபோது கடந்த 24.09.2015 அன்று காலமான திரு.மு.சின்னசாமி என்பவரின் மகன் திரு.சி.மணிவண்ணன், என்பவருக்கு கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிலைமை ) சட்டம் 2016–ல், சட்டப்பிரிவு 18(1) –ன் விலக்கின் படி ரூ.5200–20200+ தர ஊதியம் ரூ.2400 என்ற சம்பள ஏற்ற முறையில் (இதரப் படிகள் உட்பட) சிவகங்கை, இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையர் அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

Scanned by CamScanner
Scanned by CamScanner

இவர் மேற்கண்டவாறு பணியில் சேரும் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இவரது தகுதிகாண் பருவ காலம் துவக்கமுறும். தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் விதி 32 (a) (i) படி இவர் சேர்ந்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டுகளுக்குட்பட்ட இரண்டு ஆண்டு பணிக்காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். தவறின் இவரது தகுதிகாண் பருவம் முன்னறிவிப்பின்றி முறிவு செய்யப்படும். (Termination of Probation).

இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் தனது விண்ணப்பத்தில் திரு.சி.மணிவண்ணன், தெரிவித்துள்ள விபரங்கள் தவறானது என பின்னாளில் கண்டறியப்பட்டால், எவ்வித முன்னறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்யப்படுவார் எனவும், உரியவாறு குற்றவியல் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திரு.சி.மணிவண்ணன், பணியில் சேரும் நாளன்று சிவில் சர்ஜன் நிலைக்கு குறையாத மருத்துவ அலுவலரிடமிருந்து உரிய படிவத்தில் உடல் தகுதிச் சான்றினைப் பெற்று சிவகங்கை, இணை ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக இத்துறையின் சிவகங்கை, இணை ஆணையர் அலுவலகத்தில் மேற்படி மருத்துவ சான்றுடன் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர திரு.சி.மணிவண்ணன் -க்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்படியார் பணியில் சேர்ந்த விபரத்திற்கு, பணிசேர் அறிக்கை நகலுடன் இவ்வலுவலகத்திற்கு அறிக்கை அனுப்புமாறு சிவகங்கை, இணை ஆணையரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- சி.ஹரிப்ரியா,
இணை ஆணையர்(தலைமையிடம்)
ஆணையருக்காக

/உண்மைநகல்/உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

<u>பெறுநர்</u>

1. திரு.சி.மணிவண்ணன், த/பெ. திரு.மு.சின்னசாமி (அமரர்)
   குறிச்சி, தெ.புதுக்கோட்டை (அஞ்சல்),
   எமனேஸ்வரம், இளையான்குடி,
   சிவகங்கை மாவட்டம். (ஒப்புகை பதிவஞ்சல் மூலம்)

2-3 இணை ஆணையர்கள், இந்து சமய அறநிலையத்துறை, சிவகங்கை/ திருச்சி

4. கருவூல அலுவலர், சிவகங்கை.

நகல்

5. கோப்பு எண்.55705/2016/பி3

6. மிகை

Scanned by CamScanner